தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 98

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

THE "NAM NADU" A TAMIL DAILY. THE OFFICIAL ORGAN OF THE D.M.K.

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
[illegible]

சென்னை: புரட்டாசி 20உ செவ்வாய் (6—10—53) ★ ★ ★ வெளியூர்: புரட்டாசி 21உ புதன் (7—10—53)

காங். வெண்மையில் கருப்புப் புள்ளி

'பேராசைப் பிடித்த பால்காரர்களுக்கு'ச் சமானமான வெகுமதி எதிர்பார்க்கும் காங்கிரஸ் ஊழியர்கள்

திருப்பூரில் காங்கிரஸ் ஊழியர்கள் மீது! ஆச்சாரியார் தாக்குதல்!

எறும்பு, மூட்டைப் பூச்சிகளுக்கு திராவிட இயக்கத்தை ஒப்பிட்டுப் பேசுகிறார் சி. ஆர். 'பெருந்தகை!'

ஆச்சாரியார் சர்க்காரிடம் அச்சம், மரியாதை, பய பக்தி அனைவருக்கும் இருக்க வேண்டுமாம்!

திருப்பூர், அக். 6—

சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியார், தேவ்ஜி காலனி காங்கிரஸ் ஊழியர் கூட்டமொன்றில் பேசுகையில், 'உள் நாட்டில் சுதந்திரமுள்ளவர்களாக இருந்தும், எலிகள், எறும்புகள், மூட்டைப் பூச்சிகள் தொல்லைகள் இருந்துவருகின்றன. இம்மூன்றில் அந்நிய ஆட்சிகள் என்ற எலிகள் இப்போது இல்லை; ஆனாலும், எறும்புகளும், மூட்டைப் பூச்சிகளும் இன்னமும் இருந்துவருகின்றன. இவைகளை மட்டந்தட்டுவது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல," என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரஸ் ஊழியர்கள் நேர்மையாக நடந்துகொண்டால் மக்கள் காங்கிரசை மதிக்கமாட்டார்கள்.

காங்கிரசின் இலட்சியங்களை மறந்து, வெகுமதிகளையும் புகழையும் எதிர்பார்க்கும் ஊழியர்களால்தான் காங்கிரசின் கவுரவத்திற்கு மாசு ஏற்படுகிறது. காங்கிரசின் வெண்மையில், பல கரும்புள்ளிகள் தோன்றிடுவதை அனைவரும் அறிவர். பசு எவ்வளவு பால் தரும், அதில், சொந்த உபயோகத்திற்கென எவ்வளவு பால் தர முடியும், என்று பால்காரன் கேட்பதுபோல் காங்கிரஸ் ஊழியர்கள் கேட்கக்கூடாது.

கடவுளிடம் உள்ள பக்தியைப் போலவே, சர்க்காரிடம், மக்களுக்கு, பயமும், மரியாதையும், பக்தியும் இருக்க வேண்டும்.

எறும்புகள், மூட்டைப் பூச்சிகள் தொல்லை பற்றி முன்பே குறிப்பிட்டேன். துவேஷத்திலே ஊறிப்போய் வகுப்புத் துவேஷத்தைப் பரப்பும் திராவிடக் கழகம் போன்றவைகள்தான் அந்த மூட்டைப்பூச்சிகளும், எறும்புகளும்.

எறும்புகளும், மூட்டைப் பூச்சிகளும் ஒளிந்திருந்து கடிக்கின்றன. ஆனால், இந்த எறும்புகளும், மூட்டைப்பூச்சிகளும் பகிரங்கமாகவே வந்து கடிக்கின்றன. கடி, பலமாக இருக்கும்போது எறும்புகளையும் மூட்டைப் பூச்சிகளையும் நசுக்குவது இயற்கையே!

வகுப்பு வேறுபாடுகள் தான் இந்த எறும்புகளுக்கு வெல்லம்போல் இருக்கின்றன. எனவே, முதலில் அந்த வெல்லத்தை ஒழிக்க வேண்டும்

கம்யூனிஸ்டுகளை நாம் ஒடுக்கி விட்டோம். இந்த எறும்பு மூட்டைப் பூச்சிகளை ஒழித்துக்கட்ட வேண்டும்.

கம்பீரமாக வளர்ந்து காய்க்க ஆரம்பித்துள்ள மரம்தான் காங்கிரஸ் இயக்கம். ஆனால் பழம் இன்னும் நன்கு பழுக்கவில்லை. பலர் அதில் காய்த்துத் தொங்கும் காய்களைக் கண்டு பொறாமைப் படுகின்றனர்; அவர்கள் நாக்கில் நீர் ஊறுகிறது. அவற்றைப் பறிக்க நேர்மையற்ற வழிகளைக் கையாள வழி தேடுகின்றனர், சிலர்.

அப்பேர்ப்பட்ட ஒரு மரத்தை—கனி தரும் மரத்தை அழிப்பது நியாயமா? கடவுளின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன்—ஆண்டவன் பெயரால் கேட்டுக் கொள்கிறேன்—அதை அழிக்காதீர்கள்," என்று பேசி முடித்தார்.

சென்னைக்கு புதிய மந்திரிகள்

சென்னை, அக். 5—

சென்னை மாநிலத்திற்கு மேற்கொண்டு 3 மந்திரிகள் நியமிக்கப்படுவார்களெனத் தெரிய வருகிறது.

தோழர்கள் எம். பக்தவத்சலம், ராஜாராம் நாயுடு, ரத்னசாமி ஆகிய மூவரும் நியமிக்கப் படலாம் எனக் கருதப் படுகிறது.

9-ந் தேதியன்று கவர்னர் பம்பாய்க்குச் செல்வதால், அதற்குள்ளாகவே புதிய மந்திரிகள் பதவி ஏற்பர் என்று தெரியவருகிறது.

திருப்பூரில் ஆச்சாரியாருக்கு கருப்புக் கொடி

கல்வித் திட்ட எதிர்ப்பு கண்டு கலங்குகிறார்

திருப்பூர், அக். 5—

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் இங்கு வந்திருந்தபோது, தி. மு. கழகத் தோழர்களால் அவருக்குக் கருப்புக் கொடி காட்டப்பட்டது.

ஆச்சாரியார், காந்தி இலவச படிப்பகத்தைத் திறந்து வைப்பதற்காக செல்லும்போது, ஏராளமான தி. மு. கழகத் தொண்டர்கள் அவருக்குக் கருப்புக் கொடி காட்டி, 'ஆச்சாரியே, திரும்பிப் போ,' என்று கோஷமிட்டனர்.

ஆச்சாரியார், வாசகசாலையைத் திறந்துவைத்துப் பேசுகையில், "நான், படியாதவர்கள் படிப்பதற்காக, படிக்கும் நேரத்தைக் குறைத்தேன்; இது பொறுக்காமல் சிலர், வெளியே கூச்சல் போடுகிறார்கள். இவர்களால்தான் நான் சுற்றுப்பயணம் செய்யவேண்டியிருக்கிறது," என்றார்.

அம்பலமாக்குகிறார்

"தேர்தலுக்காகவும், கமிட்டிகளில் ஸ்தானம் பெறுவதற்காகவும் ஸ்தாபனத்தை நீடித்து வைத்துக்கொண்டிருந்தால் போதுமானது என்று நினைத்தால், காங்கிரஸ், தன் சக்தியை இழந்துவிடும் என்பது திண்ணம். ஸ்தாபனம் விறுவிறுப்புடன் இருக்க வேண்டும், மக்கள் உணர்ச்சியை, நடவடிக்கையை பிரதிபலிக்க வேண்டும்."

—கோவையில் நேரு 'சுதேசமித்திரன்' 5—10—53.

ஒப்புக்கொள்கிறார்!

"அப்போது காங்கிரஸ் இருந்த நிலையில் இப்போது இருக்கிறதா என்று சிலர் சந்தேகிக்கலாம். காங்கிரஸ் ஸ்தாபனம் பற்றி பலர் குற்றம் குறைகளை எடுத்துக் கூறுவர். பல குறைகள் இருக்கலாம்; இல்லையென்று கூறமுடியாது. ஜனநாயகத்தில் பல குறைகள் இருக்கின்றன.

"காங்கிரசில் குறைகள் இருந்தன; அந்தக் குறைகள் நீடிக்கவும் செய்கின்றன."

—கோவையில் நேரு 'சுதேசமித்திரன்' 5-10-53

காங்கிரஸ் கூலிப் படையின் கத்தி விளையாட்டு

மதுரை தி. மு. கழக பொருளாளர் வெட்டுண்டார்

கழகக் கொடியைத் தீயிலிட்டு கொளுத்தியவர் கைது செய்யப்பட்டார்

தங்கள் கொடியைத் தாங்களே கொளுத்திவிட்டு, கழகத்தின்மீது பழிபோடும் காங்கிரஸ் பித்தலாட்டம்

மதுரை, அக். 5—

மதுரை மாவட்ட தி. மு. கழக பொருளாளர் தோழர் சி. கிருஷ்ணசாமி இன்று பிற்பகல் 12-45 மணிக்கு சில காங்கிரஸ்காரர்களால் அரிவாளால் தாக்கப்பட்டார். தோழர் கிருஷ்ணசாமிக்கு வெங்கலக்கடைத் தெருவில் புத்தகப் பண்ணையும், வெற்றிலைப் பாக்குக் கடையும் உண்டு. இன்று பிற்பகல் அவர் தமது வெற்றிலைப் பாக்குக் கடையில் இருந்தபோது, இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த மூவர் கடைக்குள் நுழைந்து தங்களுக்கு சோடா வேண்டுமென்று கேட்டனர். சோடா எடுப்பதற்காக தோழர் கிருஷ்ணசாமி திரும்பியதும் அந்த மூன்று கூலிகளும் அவரை அரிவாளால் தாக்கி படுகாயப்படுத்தினர். தோழர் கிருஷ்ணசாமி கவலைக்கிடமான நிலையில் இருக்கிறார். கழுத்திலும், கைகளிலும் அவருக்குப் பலத்த காயம். தோழர் கிருஷ்ணசாமி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

மதுரை நகரைச் சேர்ந்த வசந்த நகரில் வ. உ. சி. படிப்பகத்திலும், சுப்ரமணியபுரம் மீனாட்சி மில் மீதும் பறந்துகொண்டிருந்த தி. மு. கழகக் கொடிகள் களவாடப் பட்டன

இவ்வளவு இன்னல்கள் கொடுத்ததுமல்லாமல், ஆண்டாள்புரம் கஸ்தூரிபாய் நினைவுப் படிப்பகத்திலிருந்த தேசியக் கொடியை அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே எரித்துவிட்டு, தி. மு. கழகத்தாரின்மீது பழியைச் சுமத்தியுள்ளனர்.

தி. மு. கழகக் கொடியைத் திருடியதாக இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த குருசாமியை போலீசார் கைது செய்துள்ளனர்.

நகரின் பல முக்கிய இடங்களிலெல்லாம் பலத்த போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. (க.சி.)

ஐவர் சிறையில்!

இன்று

36-வது நாள்

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

6—10—1953 செவ்வாய்

சாணக்கியர்!

(2)

மக்களாட்சி முறைக்கு பரம்பரை ஒன்றும் நம்பர் முதல் தர எதிரியாக இருந்துவரும் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், தலைமை அமைச்சராக இருந்து சென்னை சர்க்காரை நடத்தி வருகிற மானங்கெட்ட வரலாற்றை எல்லோருமே அறிவர். அவர் மக்களாட்சி முறைப்படி வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டசபை உறுப்பினராகவும் இல்லை, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களை ஒப்பம்பெற்று முதல் அமைச்சர் பீடத்தில் அமரவுமில்லை. காங்கிரஸ் மேலிடத்தின் பாசிச நடைமுறையினால், இவர் தலையில் முடிவைத்து, முடிசூடா மன்னர் பெருமான் பிரகாசம்! அந்த நிமிஷத்திலேயே ஜனநாயக ஆட்சிமுறைக்கு சமாதி கட்டியாகி விட்டது. பாசிச ஆட்சிமுறை தனது பேயாட்டத்தை ஆடத் துவங்கிவிட்டது. அரசியலில் அரிச்சுவடி கற்றுள்ளவர்களுக்கும் இது நன்கு தெரியும்.

ஆச்சாரியார் பிறவி மயில் அல்ல! வெறும் வான்கோழி! கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானும் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடுகிறது! பார்ப்பதற்கு அலங்கோலமாக இருக்கிறது! அவ்வளவுதான்!

செயலாளர் மாநாடு, வாத்தக ஊழியர்கள் மாநாடு, ஆலைத் தொழிலாளர் மாநாடு, என்றெல்லாம் கூட்டுவதில் நியாயமிருக்கிறது. தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள, கூலி உயர்வுக்குக் கிளர்ச்சி செய்ய, வேறு குறைகளைக் களைந்துகொள்ள முன் குறிப்பிட்டவர்கள் மாநாடு கூட்டுகிறார்கள். தங்களுக்குள்ள குறைகள் பற்றி ஆதியோடு அந்தமாகப் பேசுகிறார்கள், பரிகாரம் தேடுகிறார்கள். இது நியாயம்—முறை.

காங்கிரஸ் ஊழியர்களும் மாநாடு கூட்டினார்கள். மகத்தான நாட்டு விடுதலை இயக்கத்தின் ஊழியர்கள் கூடிய மாநாட்டில், மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை உயர்வுக்கான வழிவகைகளைக் கண்டு, அவைகளை எப்படி எப்படி நடைமுறைக்குக் கொண்டு வருவது, அதனை வெற்றிகரமாக்க ஊழியர்கள் என்ன செய்யவேண்டும் என்பனபோன்ற விஷயங்களை எல்லாம் பல கோணங்களில் இருந்து வாதித்து முடிவிற்கு வந்திருப்பார்கள் என்றுதான் பொதுமக்கள் எதிர்பார்த்து இருப்பர். ஆனால் அம்மாநாட்டில் இவ்வளவும் பற்றி எவரும் மூச்சுவிடவில்லை; ஒரு வார்த்தைகூட உச்சரிக்கவில்லை.

சொந்த வாழ்க்கைக் குறைபாடுகளின் ஆழத்தையும், உயரத்தையும், நீளத்தையும், அகலத்தையும், பருமனையும் குறித்துப் பரிதாபமானதோர் முகாரியைப் ஊழியர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இருபதாயிரம் அம்புகள் ஓர் காலத்தில் தாக்கும் செய்தி இது. நாம், ஊழியர்கள் நிலை கண்டு பரிதாபப்படவில்லை; இரங்குகிறோம்.

ஜமீன் இனாம்களில், ஒருவருக்கு ஒருவர் அடிக்கடி ஏற்படும் சொந்த விவகார சண்டைக்காக, 'அடியாட்கள்' என்று சிலரை, ஆதரித்து வருவதைப் பலர் அறிந்திருப்பார்கள். அந்த 'அடியாட்களு'க்குப் பணி கிடைக்காத நேரத்தில், 'அவர்கள்' இப்படித்தான் ஏதாவது ஒரு சிறு இடத்தில் கூடி, தங்கள் தங்கள் மிட்டா மிராசுகளின் போக்குக் குறித்துச் சண்டைபோட்டுப் பேசிக் கொள்ளுவது வழக்கம். இந்த 'அடியாட்கள்' போகட்டுமே, குறையும் கோபமும் கொண்ட, பெருந்த அரசியல் ஸ்தாபனமான காங்கிரஸ் கட்சியின் ஊழியர்கள் இங்கு வந்திருக்கிறார்கள் என்றால், அது வேதனை தரும் விசித்திரமேயாகும்.

ஊழியர்களின் நாம் மதிக்காமலோ, கண்ணியக் குறைவாக எண்ணியோ இப்படி நாம் ஒப்பிட்டுப் பேசுகிறோம் என்று நயவஞ்சக ஊழியரும் தவறாகக் கொண்டுவிடக் கூடாது.

'ஊழியர்கள்', அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், தங்களுக்குச் சரியென்று பட்டவைகளுக்காக உண்மையாகத் தொண்டாற்றும் அனைவரிடத்தும் நமக்கு நல்லெண்ணமும் மதிப்பும் உண்டு. அவர்கள் மேற்கொள்ளும் சில பல செயல்களினால் நாட்டு மக்களுக்கு நலம் கிடைத்தால், நலம் கிடைக்கக் கூடும் என்ற நல்ல நம்பிக்கை ஏற்பட்டால், கட்சி வேலிகளைக் கடந்து, அந்தத் தொண்டர்களையும், அவர்தம் உயர்ந்த தொண்டினையும் பாராட்டத் தவறியது கிடையாது. இன்னும் அந்தப் பண்பு நம்மிடமிருந்து பட்டுவிடவில்லை.

இவர்கள் மாநாடு கூட்டி, தங்கள் குறைகளுக்குப் பரிகாரம் தேடும் அளவிற்குக் காங்கிரஸ் ஊழியர்கள் நிலை கீழ் அடைந்து போயிருக்கிறது. குறைகளின் பட்டியலை நீட்டி, அவைகளுக்குப் பரிகாரம் கோருவது ஒரு பக்கம் இருக்க, இம்மாதிரி அவலநிலை பெறவேண்டிய நிலை தங்களுக்கு எப்படி வந்தது, ஏன் வந்தது, இதற்கு எவர் பொறுப்பாளிகள் என்பதற்கான காரணங்களை காங்கிரஸ் ஊழியர்கள் முதல் முதலாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்பொழுதுதான், தாங்களும், ஏற்கனவே திருப்பூர்-குமரன் போன்ற தன்னல மறுப்பாளர்களும் சேர்ந்து பணி புரிந்த, பொதுமக்களின் இருதயத்தை இருப்பிடமாகக் கொண்ட காங்கிரசுக்கும், பொதுமக்கள் தொடர்பு அறவே அறுந்துபோன இன்றைய காங்கிரசுக்கும் உள்ள வேற்றுமையைப் புரிந்துகொள்ள ஊழியர்களால் ஆகும்.

பசி எல்லா உயிர்களுக்கும் பொது. செத்துப்போன பிறகு 'பிதுருக்களாக' மாறி விடுகிறவர்களுக்குக்கூட அடிக்கடி பசிபோக, பார்ப்பனர்களுக்கு அரிசி, பருப்பு, காய்கறி தானம் கொடுக்க வேண்டுமென்று ஆரிய ஸ்மிருதி கூறுகின்ற பொழுது, நமக்கெல்லாம் 'பசி' இருப்பதிலும், அதற்கானப் பரிகாரம் தேட முற்படுவதிலும் அவமானம் ஒன்றுமில்லை. ஆனால், இந்த முயற்சியில் மானங் காக்கும் மனிதத் தன்மையை மட்டும் இழந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் நமது நீங்காக் கவலை.

பொது வாழ்வில் ஈடுபடுகிறவர்கள் அனைவரும் ஊழியர்களேயாவர். ஒவ்வொருவருடைய அறிவையும், ஆற்றலையும், சேவா நெஞ்சுரத்தையும் பொறுத்திருக்கிறது, அவரவர்கள் தொண்டு. நன்றுபடும் கட்சி தொண்டு உள்ளம் படைத்தவர்கள், ஏதாவது ஒரு கட்சி முத்திரையுடனும், அது இல்லாமலும் பொது மக்களுக்குத் தொண்டு செய்யலாம். ஊழியர்கள், கட்சி முத்திரையைத் தாங்கிக்கொண்டு இருந்தாலும், அது இல்லாமல் தனித்து இருந்தாலும், அவர்கள் புரியும் ஊழியத்தின் விளைவைக் கொண்டுதான் 'ஊழியர்கள்' என்ற பட்டியலில் அவர்கள் இடம் பெறுகிறார்கள். பொது மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் ஊழியர்கள் ஆகிறார்கள். குறிப்பிட்ட ஊழியர்களுக்கு அல்லது ஒரு கட்சியின் ஊழியர்களுக்குப் பொதுமக்களின் ஆதரவு குறைவதும் பெருகுவதும் அந்த ஊழியர்கள் மேற்கொள்ளும் காரியங்களினால் பொதுமக்கள் அடையும் பலாபலன்களைப் பொருத்ததாகும்.

ஒருவரின் ஊழியத்திற்குத் தேவையும் இருக்கவேண்டும். அந்த ஊழியத்தின் தரமும் உயர்ந்திருக்க வேண்டும். அப்பொழுதான் பொதுமக்களின் ஆதரவும், பாராட்டுதலும் கணிசமாக ஊழியர்களுக்குக் கிடைக்கும். இந்த, ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இருக்க வேண்டிய உறவு முறையில் இருந்து, காங்கிரஸ் ஊழியர்கள் கத்தரிக்கப்பட்டு விட்டார்கள். காலமாற்றம், முக்கிய காரணங்களில் ஒன்று காங்கிரஸ் ஊழியர்களிடம் மாறியுள்ள 'அதட்டல் மனவளம்' மற்றொரு முக்கிய காரணம். அவர்களின் 'சிறு செயல்' பொதுமக்களுக்கும் அவர்களுக்கும் இருந்துவந்த வெகுஜனத் தொடர்பு அறுந்து போவதைத் துரிதப்படுத்தி, வெற்றியைத் தேடிக் கொடுத்துள்ளது. இது மற்றோர் காரணம்.

காங்கிரஸ் ஆட்சியின்மீது பொதுமக்கள் வைத்திருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையில் ஆட்டங்கண்டுள்ளதால், பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பு, எரிச்சல், ஏமாற்றம் ஆகியவை, காங்கிரஸ் ஊழியர்கள் என்றாலே பொதுமக்கள் அவர்களைக் குறித்து வேறுமாதிரியான முடிவுக்கு வரும் நிலையை உண்டாக்கி விட்டு இருக்கிறது. இரு சாராரிடம் இருந்து வந்த பற்று, பாசம் துண்டித்துப் போனதற்கு, எல்லாவற்றிலும் இது சிகரம் போன்ற காரணமாகும்.

பொதுமக்களுக்கு வெறுப்பைக் கொடுத்துள்ள காங்கிரஸ் ஊழியர்களின் 'சிறு செயல்'களுக்குப் பெரும் பொறுப்பேற்க வேண்டியவர்கள், காங்கிரஸ் தலைவர்கள் என இருப்பவர்களே யாவார்கள்.

விடுதலைப் போராட்டக்காலங்களில் இன்னல் பல ஏற்று, தன்னல மறுப்பவர்களாகத் தூய வாழ்வு வாழ்ந்து, புனிதமான சேவைகளில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலோர் இப்பொழுது இல்லை. ஏதோ ஒருவர் இருவர் பெயர் சொல்வதற்காக இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் காங்கிரஸ் ஊழியர்கள் அனைவரும், அந்தத் தன்னல மறுத்தவர்களின் வாரிசுகள். அவ்வளவுதான்.

வைத்தியன் மகன் வைத்தியன் என்று கொள்ளுவது ஆபத்து. அந்த ஊழியர்களோடு இப்போது இருக்கும் ஊழியர்களை ஒப்பு வைத்துப் பார்ப்பது, அந்த ஊழியர்களை வேண்டுமென்றே அவமதிப்பது போலவேயாகும்.

இந்த ஊழியர்களில் இன்னல் அனுபவித்தவர்கள் உள்ளனர் என்பது உண்மை. இதில் சமய சஞ்சீவிகளும் உள்ளனர் என்பதும் மறுக்கக்கூடாதது. பொதுவாக இவர்கள் அனைவரும் காந்தியக் கோட்பாட்டுக்கு மாறுபட்டவர்கள். இவர்களில், காந்தியக் கோட்பாட்டை ஒரே அடியாக ஒழித்துக்கட்ட கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் 'களபதிகள்' சிலரும் உள்ளனர். காங்கிரஸ் ஊழியர்களின் இன்றைய பண்பாடு இதுதான்.

இந்தவகைத் தரக் குறைவைக் காங்கிரஸ் ஊழியர்களிடம் புகுத்தியவர்கள், காங்கிரஸ் கட்சியின் தலைவர்களேயாவர். காங்கிரஸ் ஆட்சியினால் பொதுமக்களின் வறுமை தொலையும். பொதுமக்களின் வறுமை தொலைகிறபொழுது, பொது மக்களைச் சேர்ந்த தனி நபர்கள் என்ற முறையில் தங்களுடைய வறுமையும் தொலைந்து, தங்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் குறைந்த அளவு சாதாரண வசதியாவது இருக்கும் என்று நம்பினவர்கள் இந்தக் காங்கிரஸ் ஊழியர்கள். காங்கிரஸ் ஆட்சியினால், வளம் கிடைக்கும் என்று நம்பி ஏமாந்த பொதுமக்களைப் போலத்தான் இந்தக் காங்கிரஸ் ஊழியர்களும், ஏமாற்றம், பொதுமக்களிலும் கூடுதலாகப், பெற்று இருக்கிறார்கள்,

பொதுமக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தின் காரணமாக, காங்கிரஸ்மீது தாங்கள் கொண்டிருந்த பற்றைக் குறைத்துக் கொண்டார்கள். ஆனால், காங்கிரஸ் ஊழியர்களால், இந்த வழியைப் பின் தொடரமுடியவில்லை. என்ன காரணம்? பொதுமக்களுக்கு இல்லாத உரிமை, வாய்ப்பு காங்கிரஸ் ஊழியர்களுக்கு இருக்கிறது. காங்கிரஸ் தலைவர்களே, ஆட்சிப் பொறுப்பில் உள்ள அமைச்சர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு, உரிமை காங்கிரஸ் தொண்டர்களுக்கு இன்று இருந்து வருகிறது. தங்களுக்குள்ள வாழ்க்கை வேதனைகளை அந்தத் தலைவர்களிடம் எடுத்துக்கூறவும், பரிகாரம் தேவை என வற்புறுத்தவும், பொதுமக்களுக்கு இல்லாத வாய்ப்பு, காங்கிரஸ் தொண்டர்களுக்கு இருக்கிறது.

இந்த உரிமையைப் பெற முடியாது அல்லது தேவை இல்லை என்று கருதினவர்கள் காங்கிரஸ் ஊழியர் பட்டியலில் இருந்து விலகிச் சென்று விட்டது கண்கூடு. காங்கிரஸ் கட்சியில் உள்ள கோஷ்டிச் சண்டைக்கும் இது ஒரு முக்கிய காரணம். காமராஜரைச் சார்ந்த ஊழியர், ஆச்சாரியாரை ஆதரிக்கும் ஊழியர் என்ற பாகுபாடு இருப்பதற்கு இதைத் தவிர வேறு காரணமே கிடையாது.

ஊழியர்கள் இல்லையேல் தலைவர்கள் கிடையாது. ஊழியர்களால்தான் தலைவர்கள் வளருவதும் வீழ்ச்சியுறுவதும், இது இயற்கை.

இன்றுள்ள காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும், காங்கிரஸ் ஊழியர்களால் உருவாக்கப்பட்டவர்களே, ஊழியர்கள் இல்லையேல் தலைவர்கள் இல்லை. ஆனால் தலைவர்கள் இல்லாமல் ஊழியர்கள் இருக்கலாம். ஊழியர், ஊழியர்களாக உருவெடுத்த பிறகுதான் ஊழியரிலே ஒருவர் தலைவராகிறார். அறிவு, ஆற்றல், யூகம் சிறந்தில்லாதவர், சந்தர்ப்பத்தால் தலைவராக்கப்பட்டாலும், விரைவில் வீழ்ச்சியுறுவதும் நிச்சயம்.

ஒருகாலத்தில் காங்கிரஸ் ஊழியர்களாக இருந்த அனைவரும், இன்று தலைவர்களாகவும், குட்டித் தலைவர்களாகவும், கட்டளைத் தம்பிரான்களாகவும், சட்டாம்பிள்ளைகளாகவும், களபதிகளாகவும் பிரிந்து போய்விட்டார்கள். ஒன்றாக இருந்த ஊழியர்கள் கூட்டத்தில், தரப் பாகுபாடு நுழைக்கப்பட்டு விட்டது.

தலைவர்கள் என்பவர்களுக்கு அமைச்சர் பதவி, சட்டசபை உறுப்பினர் பதவி, மாவட்ட ஆட்சி மன்றம், நகராட்சி மன்றம், வேறு வேறு செல்வாக்கு நிலையங்களின் பதவி கிடைத்துவிட்டன. அவரவர்கள், இருக்கும் அந்தந்த இடத்திற்கேற்ப வசதியும், வளமும், புகழும் சொந்தத்துக்குப் பெற்று, சுகபோகத்தில் புரண்டு கொண்டு இருக்கிறார்கள்.

இந்த அக்கிரமக் காட்சி பொது மக்களுக்கு அதிருப்தியைக் கொடுத்திருப்பதைப் போலவே, காங்கிரஸ் ஊழியர்களுக்கும் அதிருப்தியையும், வெறுப்பையும் ஊட்டி இருக்கிறது.

ஒருநாள் கூட்டுத் தோழர்களாக இருந்தவர்கள், செல்வாக்கான இடங்களில் அமர்ந்து கொண்டு களியாட்டத்திலமுழ்கியிருக்கும்போது இதைக் காணுகின்ற கண்கள் கோவைப் பழமாகத்தானே மாற்றமுறும்? காங்கிரஸ் ஊழியர்கள் கண்களும் மனிதக் கண்கள் தானே? இந்தக் காட்சி ஊழியர் கண்களைக் கரிக்கச் செய்கிறது.

இந்த உண்மையை காங்கிரஸ் ஊழியர்களை மாநாட்டிற்கு வரவேற்றுப் பேசிய காங்கிரஸ் ஊழியர் ஐயத்திற்கிடமின்றி

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத்தின் தொடர்ச்சி)

சுட்டிக் காட்டி இருக்கிறார். தொண்டர்களை, தலைவர்கள் பயன்படுத்திக்கொண்டு பதவியில் படாடோபமாக வீற்றிருக்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டுகிறார். தொண்டர்கள் அவதிக்கெல்லாம் காரணம் தலைவர்கள்தான் என்று, தலைவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே கொண்டுவந்து நிறுத்துகிறார். இதற்கு அருமையான உவமையையும் கூறுகிறார். 'ஏணி—தோணி' என்று கதை சொல்லுகிறார்.

'ஏணி' ஊழியர்கள், அதன் துணை கொண்டு, புகழிலும் பதவியிலும் ஏறிவிட்டார்கள் என்றும், 'தோணி' தொண்டர்கள், அத் தோணியின் துணை கொண்டு, வாழ்க்கைத் துன்ப சாகரத்தைத் தலைவர்கள் கடந்து, இன்பத்தின் உச்சத்துக்குப் போய்விட்டார்கள் என்றும், அந்தக் காங்கிரஸ் ஊழியர் மனம் நொந்து கூறுகிறார்.

தலைவர்களை உயரத்துக்கு ஏற்றிவிட்ட 'ஏணி' தரையிலேயே கிடக்கிறது. துன்பக் கடலைத் தாண்ட தலைவர்களுக்கு நீங்காத் துணையாக இருந்த 'தோணி' அந்த உப்புத் தண்ணீரிலேயே அலை மோதிக்கொண்டு கிடக்கிறது. அந்தோ! பரிதாபம்!

தூத்துக்குடி தோழர்கள்

ஜாமீனில் விடுதலை

சென்னை, அக். 6—

தூத்துக்குடி சதி வழக்கு சம்பந்தமாக சிறையிலிருக்கும் தூத்துக்குடி தோழர்களில், மேலும் 30 பேரை ஜாமீனில் விடுதலை செய்யும்படி, ஐகோர்ட் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் இன்று உத்தரவிட்டார். சென்ற வாரம் 33 தோழர்களை ஜாமீனில் விடுவித்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

மவுண்ட்ரோடு நிகழ்ச்சி

தாக்கப்பட்டவர்கள் பட்டியலில் மேலும் நால்வர்:—

தோழர்கள் ஏ. எல். கே. சாமி, த. தமிழ்ச்செல்வம், மு. கந்தசாமி, இரா. தனசேகரன் (இளங்கோ இளைஞர் மன்றம்.)

பெரிய புராண கால......

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

கணக்கான கழகங்களைத் தோற்றுவிப்போம், வெற்றி பெறுவோம் என்று குறிப்பிட்டார்.

தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், ப. உ. சண்முகம் ஆகியோரும் விரிவுரையாற்றினர்.

* * *

கூட்டத்தில் தூத்துக்குடி வழக்கு நிதிக்காக உண்டியல் மூலம் ரு. 26—10—1-ம், நன்கொடையாக தோழர் ஜி. வரதன் அளித்த ரு. 5—0—0-ம் சேர்ந்து, ஆக மொத்தம் ரு. 32—10—1 வசூலாயிற்று.

* * *

சிறை சென்று மீண்ட தோழர்கள் :வி. பாலகிருஷ்ணன், க. அரசிளங்கோ, செங்கற்பட்டு தோழர்கள் ஜே. எ. வகாப், டி. ஜெயராமன், என். கோதண்டராமன், அய்யம்பேட்டை தோழர்கள் ஆர். அர்த்தநாரி, முத்துகுமாரசாமி, கே. கோபால் (செவில்மேடு) பூங்காவனம்.

கருப்புக் கொடி கண்டு நேருவின் அகத்திலும், முகத்திலும் அசடு வழிந்தது!

(:)

கண்ணியம், கட்டுப்பாடு கேடயமாகக் கொண்டு 5000-க்கு மேற்பட்ட கோவை கழகத் தோழர்கள் கருப்புக்கொடி காட்டினர்

(0)

கதர்க் கொடி கோஷ்டியின் களேபரத்தைப் போலீஸ் தடுத்து நிறுத்தியது

கோவை, அக். 4—

திராவிடத் திருநாட்டில், மாபெரும் கொந்தளிப்பு உண்டாகக் காரணமாக இருந்தவரும், ஐந்தாயிரம் தி. மு. கழக வீரர்கள் சிறை செல்லக் காரணமாக இருந்தவருமான, வடநாட்டு டில்லி ஏகாதிபத்தியக் காவலன் நேரு பண்டிதர், இன்று கோவை நகரிலே, திறந்த காரிலே பவனி வந்தார்.

கோவை மாவட்ட தி. மு. கழகம் செய்த முடிவின்படி, அந்த வடவர் காவலனுக்கு கருப்புக் கொடி காட்ட, கோவை மாவீரர்கள் மூவாயிரத்துக்கு மேலானோர், தாளமுத்து—நடராசன் படிப்பகத்திலிருந்து, காலை 10 மணியளவில் ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

அந்த மாபெரும் ஊர்வலம், "நேருவே திரும்பிப் போ," "நான் சென்லை வாபஸ் வாங்கு," "தலைவர்களை விடுதலை செய்," என முழங்கிக்கொண்டு, கோவை நகரத்தின் முக்கிய வீதிகளின் வழியே வந்தன.

அவ்வூர்வலத்தை, பேளுக்குறிச்சி சோமசுந்தரம், என். எஸ். இளங்கோ, இராசமாணிக்கம், கோவைச் செழியன், தண்டபாணி, ஈரோடு அப்பாவு, முதலியோர் அணிவகுத்து, சீர்படுத்திக் கொண்டு வந்தனர்.

ஊர்வலம், வைசியாள் வீதி, ஆபீஸ்பெட், உக்கடம், ஒப்பணக்கார வீதி, பெரியகடை வீதி, திருச்சி ரோடு வழியாக சர்க்கார் மருத்துவச்சாலை அருகே அணிவகுத்து நின்றது. சுமார் ஐயாயிரம் மக்கள் அணிவகுத்து சுமார் ஒரு மைல் நீளம் நின்றார்கள்.

தோழர் என். எஸ். இளங்கோ, ஈரோடு அப்பாவு முதலியோர் தொண்டர்களை சீர்படுத்தி நிறுத்தினர். சுமார் 3 மணி நேரம், கடுமையான வெய்யிலையும் பொருட்படுத்தாது ஆரவாரம் செய்து கொண்டு நின்றனர்.

சென்னை, மதுரை போலவே தேசிய கொடிகளை நீண்ட மூங்கில் கம்புகளில் கட்டிக்கொண்டு காங்கிரஸ் கூலி தொண்டர்கள் சுமார் 500 பேர், பயங்கரமான கோஷங்களுடன் வந்தனர்.

எதற்கும் தயாரான நம் தொண்டர்கள், எவ்வித ஆயுதமுமின்றி தங்கள் கடமையரற்ற கண்ணியத்தோடும் கட்டுப்பாடோடும் நின்றனர்.

போலீசார் அந்தக் காலிகளை ஒரு பெரிய பாதுகாப்பு வளையத்தினுள் அடைத்து நிறுத்தினர். பின்னர் சர்க்கார் ஒற்றர்கள் இருநூறுக்கு மேல் வரவழைக்கப்பட்டு நம் கழக தொண்டர்களினூடே நிறுத்தப்பட்டனர்.

சுமார் ஒரு மணியளவில் டில்லியின் ஆணவ அமைச்சர், வாய்த்தடுக்கு வீரர், தன் பரிவாரம் புடை சூழ பவனி வந்தார். பாலக்காடு மலம்புழா அணைக்கட்டை பார்வையிட்டு திரும்பினார் — நம் கழக வீரர்கள், "நேருவே திரும்பிப் போ" என முழங்கினர். எங்கு திரும்பி

னும் கருங்கொடியே கண்ட நேருவின் முகத்தில் சிரிப்பை வரவழைக்க முயன்றும், அவர் அகத்தின் அழகு, அதனுள் குமுறி யெழுந்த அவமானம்

வெளியே தெட்டெனத் தெரிந்தது!

அவருக்கு வரவேற்பளித்த சில தேசியத் திருவாளர்களும்—எதிர்ப்பைக் காட்டிய இந்த பல ஆயிரம் மக்களின் ஆர்ப்பாட்டமும் அவர் உள்ளத்தில் டில்லி ஏகாதிபத்தியத்தின் முடிவைத்தான் கண்டிருக்க முடியும்? காங்கிரஸ் கொண்டுவந்த டில்லி சாம்ராஜ்யம், இந்த "அறிவு முதிர்ந்த வர்க்க"த்தினாலே அழியப்போவதை அவர் உள்ளம் கண்டுகொண்டதை அவர் முகம் தெட்டென எடுத்துக் காட்டியது. டில்லி போகிறவரையிலும் கூட திராவிடத் திருநாட்டின் எழுச்சியை நேரு பண்டிதர் மறந்துவிட முடியாது. எப்பொழுதும் காணாத "வரவேற்பை" நேரு பண்டிதர் இப்பொழுது கண்டார். கோவையும் புதிய எழுச்சியை அடைந்து நிற்கிறது. (கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தோழர்களின் விவரமும், கிளைக் கழகங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றின் விவரமும் நாளை வெளிவரும்.)

சேலம் மாவட்ட தி.மு. கழக தோழர்கட்கு!

சேலம் மாவட்டத்தில் வரும் 15 கிளர்ச்சிகளில் சிறை புகுந்த வீரர்களுக்கு, சேலம் மாவட்ட தி. மு. கழக சார்பில் ஓர் பாராட்டுக் கூட்டமும், தேநீர் விருந்தும் 11—10—53 ஞாயிறு மாலை 2 மணிக்கு சேலம் கூட்டுறவு மத்திய பாங்கு சத்திரத்தில் சேலம் மாவட்ட செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்திரம் அவர்கள் தலைமையில் நடைபெறும். சேலம் மாவட்டத்தில் சிறை சென்ற தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு பாராட்டு விழாவில் கலந்து கொள்ளுமாறு தோழர் பி. இராமலிங்கம் கேட்டுக்கொள்கிறார்.

நெருக்கடியான காலம்!

பம்பாய், அக். 6—

"இந்திய சினிமாத் தொழில் மிக நெருக்கடியான நிலைமையில் இருந்து வருகிறது; சர்க்கார், உடனடியாக உதவி செய்தால் தான், அத்தொழில், தழைக்க முடியும்; இத்தொழிலின் மொத்த வருமானம் ரு. 26,00,00,000; இதில் பாதி, சர்க்காருக்கும், முனிசிபாலிடிகளுக்கும் வரியாகச் செலுத்தப்பட்டு வருகிறது; இப்போது மிகச் சிறந்த படங்கள் கூட சில வாரங்களுக்குமேல் ஓடவில்லை," என்று இந்திய சினிமாப் பட உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதி கூறினார்.

நற்சாட்சி!

பம்பாய், அக். 6—

"சென்ற பொதுத் தேர்தல் முதற்கொண்டே காங்கிரஸ், தன் செல்வாக்கையும், கௌரவத்தையும் இழந்து வருகிறது."

"ஐந்தாண்டுத் திட்டம், மக்களிடையே ஆனந்தத்தைத் கிளப்பிவிட்டதாக என்னால் சொல்லமுடியாது; ஆனந்தம் தரும் அளவுக்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை."

—என். கே. பாடீல்,

"பெரிய புராண காலமல்ல, சமணர்களைக் கழுவேற்றினதுபோல் எங்களைக் கழுவேற்றிக் கொல்ல!"

ஆச்சாரியார் செய்த ஜனநாயகக் கொலைக்கு பண்டித நேரு உடந்தை!

தி. மு. கழகம் புடம் போட்டெடுத்த தங்கம்!

காஞ்சி, அக். 5—

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு, 3 மாதம் சிறையில் இருந்து வெளிவந்த செங்கற்பட்டு தோழர் வகாப் குழுவினருக்கு காஞ்சீபுரத்தில் நேற்று ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. ஊர்வலம், புகைவண்டி நிலயத்திலிருந்து டி. சபாபதி தலைமையில், முக்கிய வீதிகளின் வழியாக வந்து பொதுக் கூட்டத்தை வந்தடைந்தது. கூட்டத்திற்கு தோழர் எஸ். எஸ். ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

அவர் தம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த ஆச்சாரியார் முன்பு வக்கீலாக இருந்தபோது, அரைத் தூக்கத்தில் கிராமக் காவலாளியை கொலை செய்தார் என்பது உங்களுக்கு முன்பே தெரியும்! ஆனால், தற்போது மற்றுமோர் 'கொலை'யைச் செய்திருக்கிறார். இந்தக் 'கொலைக்கு' நேருவும் உடந்தையாக இருக்கிறார்! அந்தக் 'கொலை'தான் ஜனநாயகம் என்ற பச்சிளங் குழந்தையை ஆச்சாரியார் 'கொலை' செய்து விட்டார்! கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்கும்படி சட்டசபை; பெருவாரியான ஓட்டுக்களால் தெரிவித்தும், ஆச்சாரியார் அதை மதியாமல் வெறும் சிபாரிசு என்று சொல்லி, தட்டிக் கழித்து ஜனநாயக முறையையே கொலை செய்துவிட்டார்.

தன்னை புத்தன், ஏசு என்று பெருமை கொள்ளுகிறாரே, இவர் புத்தரைப் போன்று அரச வாழ்வைத் துறந்து, அரச மரத்தடிக்கு வந்திருக்கிறார்? இல்லையே! அரசமரத்தடியிலிருந்து கொல்லைப்புறமாக அரசியலுக்கு, கவர்னர் தயவால் வந்தவர்தானே! புத்தர் என்பது எவ்வாறு இவருக்குப் பொருந்தும்? தன்னை ஹிட்லர், முசோலினி, வழிவந்தவர் என்று வர்ணிப்பதுதானே பொருத்தமாக இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம் புடம் போட்ட தங்கம்—பத்தரை மாற்றுப் பசும்பொன். எப்படியென்றால், தங்கத்தை எப்படித் தணலில் காட்டி, அதிலுள்ள கழிவுப் பொருளை நீக்கி அசல் தங்கமாக்கப்படுகிறதோ, அதே போல் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து, கழிவுகளை நீக்கி திராவிடர் கழகமாக—அதிலிருந்தும் இன்று பலம் பொருந்திய பத்தரை மாற்று பசும்பொன் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இன்று நாட்டிலே இயங்குகிறது. இந்த இயக்கத்தை ஆச்சாரியாராலும் அழிக்க இயலாது. அவருக்கு மேலான நேருவாலும் அழிக்க இயலாது. மக்கள் மனதிலே தழைத்து ஊன்றிவிட்ட கொள்கைகளை உடையது திராவிட முன்னேற்றக் கழகம்" என்றார்.

தோழர் ... பேசுகை... பவர்

நடக்கட்டும். காங்கிரஸ்காரர்களுக்கும், திராவிட இயக்கத்துக்கும் மோதுதல் ஏற்படட்டும்! அந்தச் சாக்கிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது சதி வழக்குகளைப் போட்டு, இயக்கத்தையே ஒழித்துவிடலாம் என்று, ஆச்சாரியார் கனவு காண்கிறார். 'சரித்திரத்தில் தான் இருக்க வேண்டும், திராவிட இயக்கம் நாட்டிலே இருக்கக் கூடாது, கணக்குத் தீர்க்கவேண்டும்' என்று ஆச்சாரியார் கூறியுள்ளார்—எவ்வளவு கொடூரமான உள்ளம்? எத்துணை சர்வாதிகாரப் பேச்சு? 8000 சமணர்களைக் கழுவேற்றிய திருஞான சம்பந்தர் காலத்திலே மக்கள் இல்லை இன்று; ஆச்சாரியார் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள. அணு சகாப்தத்திலே—விஞ்ஞான யுகத்திலே வாழ்கிறார்கள். ஆகவே, ஆச்சாரியாரின் பழமைப் பிரசாரமும், அபத்தப் பேச்சுகளும் எடுபடாது, ஆகாது. திராவிட முன்னேற்றக் கழகக் கணக்கைத் தீர்க்க ஆச்சாரியாரா அஞ்சரி, அந்த சத்தியமூர்த்தி அய்யரே உயிர் பெற்றெழுந்து வந்தாலுஞ் சரி, யாராலும் முடியாது.

"ஆரியத்திற்கு இந்த நாட்டிலே முதலிலே கணக்கு தீர்த்துவிட்டுத்தான் திராவிடநாடு திராவிடருக்காகு,கடைசியாக இருக்கின்ற அரியமை நிறைந்த ஒரு மனிதன் திருந்துகிற வரைக்கும் பணி செய்துவிட்டுத்தான், திராவிட முன்னேற்றக் கழகம் தன் கணக்கைத் தீர்த்துக் கொள்ளும்!"

என்று கூறி... ...

கருப்புக் கொடி நிகழ்ச்சி பற்றி சென்னை தினசரிகள்!

'தினமணி'யின் பொய்யுரை அம்பலம்

★

'இந்து'

"நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டிய தி. மு. கழகத் தோழர்கள், சிம்சன் கம்பெனி அருகில், மூவர்ணக் கொடியோடு வந்திருந்த காங்கிரஸாரால் தாக்கப்பட்டு, பலகாயமடைந்தனர். போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

நேரு மவுண்ட் ரோடு அருகில் வரும்போது, அவருக்கு, கருப்பு கொடி தர இரண்டு மூன்று சிறுவர்கள் சென்றனர்; ஆனால் அவர்களைப் போலீசார் தடுத்தனர்.

நகர போலீஸ் சட்டம் 75வது பிரிவுப்படி, ஆறு பேர்கள்மீது போலீசார் வழக்குத் தொடர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

3—10—53

★

'சுதேசமித்திரன்'

"பண்டித நேரு, ராஜ்பவனிலிருந்து மவுண்ட்ரோடு ராஜாஜி ஹாலுக்கு சென்ற பிறகு, காங்கிரஸ் ஊழியர்களுக்கும், தி. மு. கழக ஊழியர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டு, 60 பேர் காயமடைந்தனர். சுமார் 40 அல்லது 50 ஊழியர்கள் கருப்புக் கொடி காட்டி ஆரவாரம் செய்தனர்."

2—10—53.

★

'தினமணி'

"நேருஜியின் கார், ராஜாஜி மண்டபத்தை நெருங்கியபோது, 'திருஷ்டி பரிகாரம்' போல் ஒரு அசம்பாவிதம் நடந்தது. தி.மு. கழகத்தைச் சேர்ந்த சுமார் 1000 தொண்டர்கள், சிம்சன் கம்பெனிக்கு எதிரில் நின்று கொண்டு, கருப்புக்கொடி காட்டி 'நேருவே, திரும்பிப்போ' என்று கோஷமிட்டனர். ராஜாஜி மண்டபத்திற்குச் சென்று கொண்டிருந்த சில காங்கிரஸ் தொண்டர்களுடன் பின்புறம் அவர்கள் திடீரென்று கைகலந்தனர். இரு தரப்பிலும் சிலர் காயமடைந்தனர். அவர்கள் கூட்டத்திற்குப் பின்புறம் இருந்ததால், கூட்டத்தை விலக்கிக்கொண்டு போலீசார் வந்து அமைதியை நிலை நாட்டுவதற்குள்ளாக அக்கைகலப்பு ஏற்பட்டு விட்டது. பிறகு காங்கிரஸ் தொண்டர்கள் கலைந்து சென்றனர்.

காலை 10-15 மணிக்கு, நேருஜி ராஜாஜி மண்டப வாயிலுக் கருகில் வந்தபோது, தி. மு கழகத் தொண்டர்கள் சுலோகங்களைக் கோஷித்தவாறு கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு முன்னுக்கு வந்தனர். நேருஜியின் காரை நோக்கி செருப்புகளையும் வீசினர்! அந்தக் குழப்பத்தில் ஒருவர், போலீஸ் 'வளையத்'தை மீறிக்கொண்டு, கருப்புக் கொடியுடன் நேருஜியின் காரை நெருங்க முயற்சித்தனர். இதுவரை பி. ஆர். அண்டு சன்ஸ் கம்பெனி அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்த காங்கிரஸ் தொண்டர்களின் பெரிய கூட்டமொன்று, தி.மு. கழகத்தொண்டர்கள் இருந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றது.

உடனே போலீஸ் கமிஷனர் எஸ். பார்த்தசாரதி அய்யங்கார், டெபுடி கமிஷனர் எம். வி. அருள், இதர போலீஸ் அதிகாரிகளுடன் ஆயுதம் தரித்த ... தேசமுற்ற ... னர்.

காயம் ஏற்பட்டதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களில் 7 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். கூட்டத்தினரைக் கலைக்க போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்தனர். 8 தி. மு. கழகத் தோழர்கள் ரவுண்ட் டாணாவில் கைது செய்யப்பட்டனர்.

காலை பதிப்பு 3—10—53

★

'பாரத தேவி'

நேருஜி, ராஜாஜி மண்டபத்தில் நுழையும்போது, தி. மு. கழகத்தைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள், நேருஜிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி கருப்புக் கொடி காட்டினர். தி. மு. கழகத் தோழர்களின் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக, தேசிய இளைஞர் முன்னணியினர், காங்கிரஸ் கொடியையும், தேசியக் கொடியையும் காட்டினர். இம்மாதிரி இரு கூட்டங்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களினால் இரு கட்சிகளும் கைகலந்தன. இந்தக் கைகலப்பில் போலீஸார் தலையிட நேர்ந்தது.

மேற்படி கைகலப்பில் கலந்த சுமார் 50 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டதாகத் தெரிகிறது. காயமடைந்தவர்களில் ஒருவர் கான்ஸ்டேபிள்; மூன்று குழந்தைகள்.

3—10—53.

★

'தினத் தந்தி'

சென்னையில் நேருவுக்கு எதிராக தி. மு. கழகத்தினரால் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது இதற்குப் போட்டியாக காங்கிரஸ் காரர்கள் கதர்க் கொடிகளைக் காட்டி, ஆர்ப்பாட்டம் செய்து நேருவை வரவேற்றனர் இரு தரப்பினரும் மோதிக் கொண்டதால் 62 பேர் காயமடைந்தனர். போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டக் காரர்களைத் தடுத்தனர். ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக 52 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

3—10—53.

வின்சென்ட் தொழிலாளர் சங்கம்

பீமநகர், செப். 30—

26—9—53-ல், திருச்சி வின்சென்ட் தொழிலாளர் சங்கக் கூட்டம், தோழர் டி. சி. எஸ் மணி தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் வி. கைலாசம், டி இ. அப்துல்லா ஆகியோர், தொழிற் சங்க வளர்ச்சி பற்றிப் பேசினர் பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சலசலப்பு!

பீரட், அக். 4—

முன்னாள் எகிப்து பிரதமரான அப்துல் ஹாடிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதை மற்ற அரபு நாடுகள் வரவேற்கவில்லை. அரபு தினசரி ஒன்று, அதன் தலையங்கத்தில், "பாலஸ்தீன் யுத்தத்தின்போது எகிப்து இராணுவ நிலைமை பற்றி அப்துல் ஹாடி சரியான தகவல் கொடுக்கவில்லை யென்றால், யுத்தத்தில் கலந்து கொண்ட ஒவ்வொரு அரபு தலைவருக்கும் இதே தண்டனை அளிக்க வேண்டும்" என்று கூறுகிறது.

கரும்பு சக்கையிலிருந்து காகித அட்டை!

பாக்தாத், அக். 6—

...இல், கரும்பு சக்கை ... அட்டைகள் ... ஆராய்ச்சி ... றனர்.

தி. மு. கழக செயற் குழு தேர்தல்கள்

★

சிழுமாத்தூர்

18-9-53 மாலை, இவ்வூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் கூடியது. அதுபோது, தோழர்கள் எஸ். தமிழன் செயலாளராகவும், ஏ. கமர்தீன் துணைச் செயலாளராகவும், எம். அனீபா பொருளாளராகவும், அரபு சா, முகம்மது அலி ஆகியோர் விளம்பர உறுப்பினர்களாகவும், இ. இராமு மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் முகம்மது சரீப், எஸ். அருணப்பன், சி. பிச்சை, வீ. பாண்டி, கே. முகம்மது, பி. சந்திரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

21—9—53 மாலை பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் எம். எஸ். இராமசாமி, எம். ஆர். கணேசன் சொற்பொழிவாற்றினர்.

விளாத்திகுளம்

27—9—53ல் தோழர் எஸ் வி. காந்தன் தலைமையில் தி. மு கழக செயற்குழுக் கூட்டம் கூடி, செயலாளர், தோழர்கள் எஸ். வி. காந்தன், துணைச் செயலாளர் வி. எஸ். துரைராஜ், பொருளாளர் கே. டி. சாமி, விளம்பர உறுப்பினர் எஸ் சோலையப்பன், மற்றும் 11 தோழர்கள் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கும்மிடிபூண்டி

27—9—53ல், செயற்குழு தீர்மானப்படி கும்மிடிபூண்டி இரண்டாம் பொதுத் தேர்தல் திரு. டி. எல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது- தோழர்கள் கு. இராசமாணிக்கம், செயலாளர்; எ. பி. கணேசன், துணைச் செயலாளர்; ப. செ. சு. மணி, பொருளாளராகவும், மற்றும் 11 பேர் கொண்ட செயற் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வெளிப்பட்டினம்

வெளிப்பட்டினம் (முகவை உட்கிளை) தி மு கழக உறுப்பினர் கூட்டம் முகவை நகர தி மு. கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. செயற்குழு திருத்தி அமைக்கப்பட்டு தோழர்கள் ஏ கே. சாமி, செயலாளர்; கணபதி, துணைச் செயலாளர்; எழிலன், பொருளாளராகவும்; நடராசன், முனியாண்டி, இராசகோபாலன் ஆகியோர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காஞ்சிபுரம்

27—9—53-ல் ராசவீதி, தி. மு கழகக் கிளையின் நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம், தோழர் இரா. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது, கழகச் செயலாளராக உள்ள தோழர் இரா வெங்கடேசன் நகரச் செயலாளராக பணியாற்றுவதால், சட்டப்படி, ஒரு கழகத்தில் செயலாளராக உள்ளவர் மற்றொரு கழகத்திற்கு செயலாளராக இருக்கக்கூடாது என்ற காரணத்தை முன்னிட்டு, சி. எஸ் பாலன் அவர்களை செயலாளராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

சிங்கம்புணரி தோழர்கள்

செப். 30-ந் தேதி கூடிய செயற்குழுக் கூட்டத்தின் முடிவுப்படி தோழர்கள் குருசாமி, பெரி. அழகு, நடராசன், சுந்தரம், சேவுக மூர்த்தி. அய்யாவு ஆகியோர் மதுரையில் நடைபெற்ற கருப்புக் கொடி நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மூணார்

இவ்வாண்டு கழகத் தேர்தல் 30—9—53 அன்று நடைபெற்றது. தோழர் பொ. ஞானமணி செயலாளராகவும், எம். ஜான் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருமணங்கள்

★

கிருட்டிணகிரி தாலுகா, ஜகதேவி தரப்பாக்கிய மானூர் தோழர் என். கோவிந்தசாமிக்கும், தோழியர் ஜெயலட்சுமிக்கும் 11—9—53 அன்று தோழர் என். கோதண்டராம் தலைமையில் திருமணம் நடைபெற்றது. தோழர் ஆர். வெங்கடாசலம், கிருட்டினன் ஆகியோர் பேசினர். 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிப்பு அளிக்கப்பட்டது.—இந்த ரூ. 3-ம் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

பெங்களூர் மேகம் மல்லையா சத்திரத்தில் 13—9—53 அன்று தோழர் தர்மலிங்கம் தலைமையில் தோழர் இராசகோபாலுக்கும், தோழியர் செயம்மாளுக்கும், தோழர் வேணுகோபாலுக்கும் தோழியர் நாட்டாத்தியம்மைக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அனுப்பப்பட்டது.—வரப் பெற்றோம்-நன்றியுடையது -பொறுப்பாளர்.

* * *

11—9—53 வெள்ளியன்று காலை 9-மணிக்கு பூக்குளம் தி மு. கழக செயலாளர் தோழர் எஸ். எஸ். மகாலிங்கத்திற்கும், தோழியர் சுப்புலட்சுமிக்கும் அருப்புக்கோட்டை தோழர் எம். எஸ். ராமசாமி தலைமையில், திருச்சுழியில் திருமணம் நடைபெற்றது. 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது.—வரப் பெற்றோம் — நன்றியுடையது -பொறுப்பாளர்.

* * *

அம்பலூட்டிபாளையம் :- 6-9-53 காலை 10 மணியளவில், தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் சேகர்—சுசீலா திருமணம் நடந்தது.

* * *

கிள்ளை :- 10-9-53 பகல் 1-மணிக்கு மேல் 3-30 மணிக்குள் தோழர்கள் கே. கண்ணையன். கே எம். நாராயணசாமி, என். நக்கீரன் தலைமையில் முறையே ஆதிமூலம் — குணபூஷணி, குட்டியாண்டசாமி — தனபாக்கியம், மணி — கோவிந்தம்மாள் ஆகிய மூன்று திருமணங்கள் முறையே நடந்தன. தோழர்கள் தில்லை-வில்லாளன், பொ. சொக்கலிங்கம் ஆகியோர் மணத்தை நடத்திவைத்தும், மணமக்களை வாழ்த்தியும் சொற்பொழிவாற்றினர். இத்திருமணங்கள் சார்பில், கழக வளர்ச்சிக்காக தந்த ரூ. 6-ம், விரைவில் தில்லையில் மிகச் சிறப்பான முறையில் நடத்த இருக்கும் 'திராவிட நாடு பிரிவினை நாள்' விழாவிற்கு நன்கொடையாக ஏற்றுக்கொள்ளப் பட்டது

* * *

பெருமாத்தூர் :- 14-9-53ல் தோழர் தில்லை — வில்லாளன் தலைமையில் மாயவன்—பவுனம்மாள் திருமணம் நடந்தது. மணமக்களைப் பாராட்டி, தோழர்கள் பழமலை, ராமகிருட்டினன், சச்சிதானந்தம், கிருபாலையம் அ. சம்மந்தம் ஆகியோர் பேசினர். கழக வளர்ச்சிக்கென அளிக்கப்பட்ட ரூ 11 ஐ, விரைவில், தில்லையில் நடத்தவிருக்கும் பிரிவினை நாள் விழாவிற்கு நன்கொடையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

* * *

சிதம்பரம் :- 15-9-53 காலை 6-மணி யளவில் தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் ராமகிருட்டினன்—மணிமேகலை திருமணம் நடந்தது. இந்தப் பகுதியில் கார்கார்த்தார் இனத்தில் நடத்தப்படும் பகுத்தறிவுத் திருமணம் இதுதான். தோழர் பொ சொக்கலிங்கம், இராம-முத்துக்குமரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணம் இம்முறையில் நடைபெற காரணமாயிருந்தவர் தோழர் பொ. சொக்கலிங்கமாவார். அவர் முயற்சி பாராட்டற்குரியது.

தி. மு. கழகங்கள் துவக்கம்

★

குன்னூர்

19—9—53ல், குன்னூரையடுத்துள்ள ஆர்ச்சடின் எஸ்டேட்டில், தி. மு. கழகக் கிளை ஆரம்பிக்கப்பட்டது. தலைமை வகித்த குன்னூர் நகர திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் சே. சு. ஆகன், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகள் பற்றியும், தோட்டத்தொழிலாளரின் முன்னேற்றம் பற்றியும், தி. மு. கழக போராட்டங்கள் குறித்தும் விரிவுரையாற்றினார். பின்னர், தோழர்கள் த. அரையரசன், வாசு, பி.மணி ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர்கள் ராஜரத்தினம் செயலாளராகவும், ராஜாமேஸ்திரி துணைச் செயலாளராகவும், முத்துசாமி மாவட்ட பிரதிநிதியாகவும், ஆப்ரகாம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அம்மாபேட்டை

20-9-53 காலை 9-30 மணிக்கு தோழர் எம். ஏ. பொன்னு அவர்கள் தலைமையில், சேலம்-அம்மாபேட்டை 23-வது வார்டு தி. மு. கழகம் துவக்க விழா நடைபெற்றது. அதுபோது தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., கொடி ஏற்றினார். தோழர் வி. பி. சோமசுந்தரம் கழகத்தைத் திறந்துவைத்தார். தோழியர் அருள்மொழி, பி. ஓ. எல்., சொற்பொழிவாற்றினார்.

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்களிடம் ஐந்து ரூபாய் கொடுக்கப்பட்டது.

கண்டமங்கலம்

காட்டுமன்னார்குடியை அடுத்த கண்டமங்கலத்தில், 13-9-53ல் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் க. துரைசாமி அவர்கள் தலைமையில் நடந்தேறியது. கழகக் கொள்கைகள் தி. மு. கழகப் போராட்டங்கள் குறித்து தோழர்கள் வா. க. இராமலிங்கம், ஆ. வேலாயுததாசன், பொ. சொக்கலிங்கம், எஸ். கே. சாமி, ஆகியோர் பேசினர். பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தூரப்பு — வேளப்பூண்டி

தூரப்பு, வேளப்பூண்டி தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் ராமானுசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. ஆர். சாமி, இராம. முத்துக்குமரன், செங்குட்டுவன், இராமலிங்கம், பொ. சொக்கலிங்கம், க. அறிவழகன், கிருட்டினமூர்த்தி ஆகியோர் பேசிய பின் பல கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாரங்கியூர்

26—9—53ல் மாரங்கியூரில் தி. மு. கழக துவக்கவிழா நடைபெற்றது. தோழர் வி. பி. அரையசன் தலைமை வகித்தார். தோழர்கள் சி. இளவழகன், தோழர் பாலகுருசாமி ஆகியோர் பேசினர்.

பெரியசேவலை

திருக்கோவிலூர் வட்டத்தில் பெரியசேவலை தி. மு. கழகத் துவக்க விழா 27-9-53ல் நடைபெற்றது. தோழர் டி. ஆர். பக்கிரிசாமி தலைமை வகித்தார். தோழர்கள் டி. என். ஜி அண்ணாமலை, துரையரசன், இளவழகன ஆகியோர் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.